# Event Report

**Regional media workshop – Salem, 2022**

CAG in collaboration with Consumer Rights Movement, Salem conducted a regional media workshop in Salem on the 25th of September, 2022. The workshop aimed at underlining the need for implementation of the Motor Vehicles Amendment Act (MVAA) 2019 and sensitizing media reporters to cover road crashes more effectively. The workshop witnessed the participation of over 30 media personnel, inclusive of senior reporters and journalists. The event was presided over by officials from the district's police and transport department including Mr.Ravichandran (Additional Deputy Commissioner of Police, Salem), Mr.Damodharan (Regional Transport Officer - Dharmapuri), and Mr. Kalyanakumar (Regional Transport Officer – Salem East).

Mr.J.M Boopathi (Consumer Rights Movement) delivered the welcome address followed by a presentation by Ms. Varsha Vasuhe.V (Researcher, CAG) highlighting the various provisions of MVAA and the need to strengthen enforcement through increased fines for traffic violations. She also discussed the findings of the helmet and seat belt compliance study conducted at four major intersections in the district. The intersections studied include Kondalampatti, Collectorate Junction, Five Roads, and Cherry Road. The findings reveal that out of the 4761 total two-wheelers surveyed, 68% of drivers and 82% of the pillion riders were not wearing helmets. Out of the 1558 cars surveyed, 63% of the drivers, 88% of front seat passengers, and 97% of back seat passengers did not strap their seatbelts on. Such alarming levels of non-compliance with wearing safety gear among motorists only point to the need for sustained implementation of higher penalties as mentioned under the MVAA 2019. Implementation of the MVAA 2019 coupled with quality enforcement will help improve the road safety scenario of the district.

Mr. G. Ananthakrishnan, a senior journalist who was the guest speaker, stressed the importance of the media's role in highlighting the road safety improvements needed and holding the government accountable for the same. He also emphasised the need to report road crashes as social crises and use pro-people language. He highlighted that the common practice in vernacular media has been reporting single collisions with very weak or no follow-up investigation. He encouraged that media investigation and follow-up of road crashes would prove to be a useful tool in promoting road safety measures.




**📷 Keynote by Mr.Ravichandran (Additional Deputy Commissioner of Police, Salem) | Photo: CAG**

The key speaker Mr.Ravichandran (Additional Deputy Commissioner of Police, Salem) spoke on how Enforcement and Engineering should work in parallel with Education on road safety. He also stressed that the socio-economic costs of road crash deaths and injuries should be factored in while strategizing enforcement measures. Mr.Kalyanakumar (Regional Transport Officer – Salem East) spoke about how the penalties have been duly increased for overloaded vehicles as per MVAA 2019. Though efficiency of enforcement can be increased, he stated that repeat offenders are being observed and notified to attend sessions where they are sensitised on the consequences of their various traffic violations. As Salem witnesses over 300 road crashes every month, he suggested that enforcement should be coupled with other aspects of education, engineering and willingness to comply with the traffic rules by the road users. Mr.Damodharan (Regional Transport Officer - Dharmapuri) underlined the need for different departments such as the police, highways authority, and the regional transport authority to work in a coordinated manner to strengthen road safety and enforcement. He also spoke in detail about eliminating blackspots along the Thoppur Ghat Road where road crashes involving trucks carrying freight were prevalent.

Reputed media personnel from the district of Salem including Mr.Senthil Kumaran, the special correspondent, The Times of India, and R.S.Sakthivel, correspondent, Kalaignar TV also spoke about the consistent efforts taken by the media to highlight causal factors of road crashes in the district. They positively received the suggestions to conduct follow-up media investigations rather than reporting single collisions. They also showed substantial interest in highlighting the need for increased penalties as per MVAA 2019 in a positive manner to eliminate the common man's misconception of fines as police harassment.

The event kick-started several discussions around the media's role in a road crash investigation, implementation of the increased penalties under the MVAA 2019 and received significant coverage in print and visual media.




📷 **Media and news website coverage | Just Now Salem**

நாடு முழுவதும்

# 2020-21ல் அஜாக்கிரதையால் மட்டுமே சாலை விபத்தில் 42 ஆயிரம் பேர் பலி

## பள்ளி நேரத்தை மாற்றி அமைக்கலாம்

## சாலை பாதுகாப்பு கருத்தரங்கில் தகவல்

சேலம், செப்.26: இந்தியாவில் 2020-21ம் ஆண்டில் அஜாக்கிரதையால் மட்டுமே 42 ஆயிரம் பேர் சாலை விபத்தில் உயிரிழந்துள்ளனர் என்று சாலை பாதுகாப்பு குறித்த கருத்தரங்கில் வட்டார போக்குவரத்து அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென்னை சிஏஜி மற்றும் நுகர்வோர் உரிமை இயக்கம் சார்பில் சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் சேலத்தில் நேற்று நடந்தது. நிகழ்ச்சியில் சேலம் கிழக்கு வட்டார போக்குவரத்து அலுவலர் கல்யாணகுமார் பேசியதாவது: வாகனத்தில் ஓவர் லோடுக்கு ₹6 ஆயிரம் வரை அபராதம் விதிக்கப்படுகிறது. லைசென்ஸ் இல்லாமல் வாகனம் ஓட்டினால் ₹10 ஆயிரம் வரையும், வாகனத்திற்கு பர்மிட் இல்லை என்றால் ₹10 ஆயிரம் வரையும் அபராதம் விதிக்கப்படுகிறது. சேலம் மாவட்டத்தில் ஒரு மாதத்தில் மட்டும் 300க்கும் மேற்பட்ட விபத்துகள் நடக்கிறது. இதில் நள்ளிரவு 12 மணிமுதல் அதிகாலை 3 மணிவரை ஒன்று முதல் இரண்டு சதவீதமும், அதிகாலை 6 மணிமுதல் 9 மணிவரை 13 சதவீதமும், மாலை 6 மணிமுதல் 9 மணி முதல் 28 சதவீதமும் விபத்துகள் நடக்கிறது. மாலை நேரத்தில் ஏன் அதிகளவில் விபத்துகள் நடக்கிறது என்று ஆய்வு செய்தால், எல்லோரும் பணியை முடித்துக்கொண்டு வீடுகளுக்கு அவசர அவசரமாக செல்லும் இந்த நேரத்தில்தான் அதிகம் பேர் வாகனத்தில் செல்கின்றனர்.

அப்போது விபத்துகள் அதிகளவில் நடக்கிறது. இந்நேரத்தில் சிலர் குடிபோதையில் கவனம் சிதறி வாகனங்களை ஓட்டி விபத்தை ஏற்படுத்துவது முக்கிய காரணமாக உள்ளது. மக்கள் நெருக்கம் இருக்கும் பகுதியில் வாகன ஓட்டிகள் 40 கிலோமீட்டரில் செல்வதை தவிர்த்து, அந்த இடத்தில் 10 முதல் 20 கிலோமீட்டர் வேகத்தில் செல்லவேண்டும். தேசிய நெடுஞ்சாலையில் 80 கிலோமீட்டர் வேகத்தில் செல்லலாம் என்று உள்ளது. ஆனால் அங்கு நகர பகுதியில் வரும் வேகத்தை 40 கிலோமீட்டராக குறைத்துக்கொள்ள வேண்டும். வாகனம் ஓட்டுபவர்கள் யாராக இருந்தாலும் திரும்பும்போது இன்டிகேட்டர் போட்டு, பக்கவாட்டு கண்ணாடியை பார்த்து திரும்ப வேண்டும்.

சேலம் மாவட்டத்தில் ஆகஸ்ட் வரை டூவீலரால் 43 சதவீதமும், கார், ஜீப், டெம்போவால் 29 சதவீதமும், டிராக், லாரியால் 5 சதவீதமும், தனியார் பஸ் மூலம் 5 சதவீதமும், அரசு பஸ் மூலம் 5 சதவீதமும், இதர வாகனங்களால் 5 சதவீதமும் விபத்துகள் நடந்துள்ளது. அதேபோல் மாநில நெடுஞ்சாலையில் 44 சதவீதமும், தேசிய நெடுஞ்சாலையில் 36 சதவீதமும், கிராம சாலையில் 17 சதவீதமும் விபத்துகள் நடந்துள்ளது.



இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் தர்மபுரி வட்டார போக்குவரத்து அலுவலர் தாமோதரன் பேசியதாவது: இந்தியாவில் 2020-21ம் ஆண்டில் அஜாக்கிரதையால் மட்டுமே சாலை விபத்தில் 42 ஆயிரம் பேர் இறந்துள்ளனர். இது மொத்த விபத்தில் 28 சதவீதம் ஆகும். விபத்துகளை தடுக்க வட்டார போக்குவரத்து அலுவலர், போக்குவரத்து காவலர்கள், நெடுஞ்சாலைத்துறையினர் சேர்ந்து ஆய்வு செய்ய வேண்டும். குறிப்பாக பீக் ஹவர்ஸ் நேரத்தில் விபத்துகள் அதிகளவில் நடக்கிறது. ஏன் என்றால் இந்நேரத்தில் பள்ளி குழந்தைகளை சரியான நேரத்தில் கொண்டு சேர்க்க வேண்டும் என்பதற்காக வாகனத்தை வேகமாக இயக்குகின்றனர். பள்ளிக்கு ஒரே நேரத்தில் 5 ஆயிரம் குழந்தைகள் வரும்போது, அந்த பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதை தவிர்க்க 1 முதல் 5ம் வகுப்பு வரை ஒரு நேரமும், 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை ஒரு நேரமும் என காலை, மாலை நேரத்தை மாற்றி அமைக்கலாம்.

வாகன ஓட்டிகளுக்கு அபராதம், விழிப்புணர்வு மூலம் வெறும் 20 சதவீதம் மட்டுமே குறைக்க முடியும். சாலை விதிமுறைகளை பொது மக்கள் முழுமையாக கடைபிடித்தால்தான் விபத்துகளை முழுமையாக குறைக்க முடியும். தேசிய நெடுஞ்சாலையில் தற்போது இருசக்கர வாகனங்கள் செல்ல 1.25 மீட்டர் அளவுள்ள சாலை தான் உள்ளது. தற்போது இருக்கும் இருசக்கர வாகனங்களைவிட, இன்னும் 10 ஆண்டில் பல மடங்கு இரு சக்கர வாகனங்களின் எண்ணிக்கை உயரும். இந்த அளவுள்ள சாலையில் இருசக்கர வாகனங்கள் செல்ல முடியாது. ஒரு சில வெளிநாடுகளில் இருசக்கர வாகனங்கள் செல்ல தனிப்பாதை உள்ளது. அதேபோல் இங்கும் கொண்டு வரவேண்டும். இவ்வாறு தாமோதரன் பேசினார்.

முன்னதாக நிகழ்ச்சிக்கு நுகர்வோர் உரிமைகள் நிறுவனர் பூபதி தலைமை வகித்தார். செல்வம் வரவேற்றார். சண்முகசுந்தரம் அறிமுக உரையாற்றினார். சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு பிரசுரங்களை சேலம் மாநகர காவல் கூடுதல் துணை ஆணையர் ரவிச்சந்திரன், சேலம் கிழக்கு வட்டார போக்குவரத்து அலுவலர் கல்யாணகுமார், தர்மபுரி வட்டார போக்குவரத்து அலுவலர் தாமோதரன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். சென்னை சிஏஜி ஆராய்ச்சியாளர் வர்ஷா, பாஸ்கரன், போக்குவரத்து ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

📷 **Article quoting data highlights on various road safety risks from the regional media workshop on road safety | Dinakaran Newsprint**



சேலத்தில் சாலை பாதுகாப்பு குறித்து கருத்தரங்கம் நடை பெற்றது.

## சேலத்தில் சாலை பாதுகாப்பு குறித்த கருத்தரங்கம்

சேலம்,செப்.26-

சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் சென்னை சிஏஜி மற்றும் நுகர்வோ உரிமை இயக்கம் சார்பில் சேலத்தில் நடந்தது. நிகழ்ச்சிக்கு நுகர்வோர் உரிமைகள் இயக்குனர் நிறுவனர் பூபதி தலைமை தாங்கினார் .செல்வம் வரவேற்றார். சண்முகசுந்தரம் அறிமுக உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு பிரசுரங்களை சேலம் மாநகர போலீஸ் கூடுதல் துணை கமிஷனர் ரவிச்சந்திரன் மற்றும் சேலம் கிழக்கு வட்டார ஆர்டிஓ கமலக்கண்ணன், தர்மபுரி ஆர்டிஓ தாமோதரன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

நிகழ்ச்சியில் சேலத்தில் சாலை பாதுகாப்பு குறித்து மாணவர்கள் மேற்கொண்ட சாலை போக்குவரத்து ஆய்வு குறித்த விழிப்புணர்வு பிரசுரங்கள் வெளியிடப்பட்டது. மேலும் சென்னை சிஏஜி ஆராய்ச்சியாளர் வர்ஷா, ஆனந்த கிருஷ்ணன் சாலை பாதுகாப்பு குறித்து விளக்கம் அளித்தனர். நிகழ்ச்சியில் பாஸ்கரன் நன்றி கூறினார் போக்குவரத்து ஆர்வலர்கள் நுகர்வோர் ஆர்வலர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

📷 **Snippet about the regional media workshop on road safety highlighting the helmet and seatbelt compliance study | Dinamalar Newsprint**